புதுச்சேரி அரசு

போக்குவரத்து துறை

***

<u>செய்திக் குறிப்பு</u>

புதுச்சேரி போக்குவரத்து துறையின் **PY-01 DE** (புதுச்சேரி) வரிசையில் உள்ள எண்களை **https://parivahan.gov.in/fancy** என்ற இணைய தளத்தில் 02.04.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஏலம் விட இருக்கிறது.

இந்த ஏலத்தில் பங்கு பெறுவதற்கு தேவையான பெயர் (**User Name**) மற்றும் கடவு சொல்லை (**Password**) **https://parivahan.gov.in/fancy** என்ற இணையதளத்தில் **"New Public User"** கிளிக் செய்வதன் மூலமாக 26.03.2025 முதல் 01.04.2025 வரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்தவர்கள் மட்டுமே 02.04.2025 காலை 11.00 மணி முதல் மாலை 4.30 வரை ஏலத்தில் பங்கு பெறலாம்.

இந்த E-Auction முறையில் பங்கு பெற விரும்பும் பொது மக்கள் அதற்கான வழிமுறைகள் மற்றும் ஏல நிபந்தனைகளை 26-03-2025 முதல் **https://transport.py.gov.in** என்ற இணைய தள முகவரியில் பார்த்தும்/ மற்றும் பதிவு இறக்கமும் செய்துகொள்ளலாம். விண்ணப்பத் தொகையின் விவரம், **E.M.D.-** யின் விபரம், ஏல நிபந்தனைகள் குறித்த விவரங்கள் மற்றும் இது சம்பந்தமான இதர விபரங்களை போக்குவரத்துத் துறை அலுவலகத்தின் தொலைப் பேசி எண்: 0413 2280170 **Extn. 236** மூலம் தெரிந்துகொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட எண் முன்பதிவு செய்யப்பட்ட வாகனம் அந்த எண்ணை முன்பதிவு செய்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள் பதிவு செய்ய தவறினால் அத்தகைய முன்பதிவு செயலிழந்துவிடும் மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட எண் அவரது உரிமையை இழந்துவிடும்..இந்த ஏலத்தில் கலந்து கொண்டு இந்த ஏலம் சம்பந்தப்பட்ட பண பரிவர்த்தனை அனைத்தும் **Online Payment** மூலம் இணைய தளம் வாயிலாக மட்டும் பெறப்படும். நேரிலோ மற்றும் காசோலையாகவோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

24/3

போக்குவரத்து ஆணையர்